பட்டிருந்தது. அது ஒருவேளை சபையின் கவனத்தையும் அல்லது மக்களுடைய கவனத்தையும் கவராமல் போய்விடுமோ என்ற காரணத்தால் அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த ஆகஸ்ட் திங்களில் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைக்கின்றபோது நான் எப்படியும் கச்சத்தீவை மீட்டுத் தருவேன் என்று நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கூறியிருந்தார்கள். அதைப்பற்றியும் பாரதப் பிரதமருக்கு எழுதியிருக்கிறார்கள். அதுகுறித்தும் அந்தக் கடிதத்திலே பாரதப் பிரதமர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினை குறித்து நாங்கள் பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பரிசீலிக் கிறோம் என்று சொன்னதேகூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிற முயற்சிக்கு கிடைத்து இருக்கிற வெற்றியாக நான் இங்கே (மேசையைத் தட்டும் ஒலி) உங் களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம் என் பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(ஆ) வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்திலுள்ள சந்தன எண்ணெய் ஆலை மூடப்பட் டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு; திரு. சி, ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்து வம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ''வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்தில் உள்ள அரசு சந்தன எண்ணெய் ஆலை மூடப் பட்டது குறித்து'' மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு, செ, ரகுபதி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதுபற்றி விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது,

அறிக்கை

வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம், தெக்குப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை 1—10—1984 முதல் வணிக ரீதியில் இயக்க

[திரு. செ. ரகுபதி] [1992 மார்ச் 23

தமிழ்நாடு வனத் தோட்டக் கழக நிறுவனத்திற்கு அரசு அனுமதியளித்திருந்தது. இந்த தொழிற்சாலையில் சந்தன மர எண்ணெயும் அதன் துணைப் பொருட்களும் தயாரிக்கப்பட்டு வந்தன. தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட சந்தன எண்ணெய் மற்றும் அதன் துணைப் பொருட்கள் உரிய விலைக்கு விற்பனையாகாததால், தயாரிக்கப்பட்ட பொருட்களின் இருப்பு அதிகரித்தது. ரூபாய் 45 இலட்சத்திற்கு பெறுமான பொருட்கள் விலை போகாமல் தேக்கநிலை அடைந்ததால், தொழிற்சாலையின் செயல்பாட்டு திறன் ஆராயப்பட்டது, இறுதியாக, இத்தொழிற்சாலை லாபகரமாகவும், நிரந்தரமாகவும் செயல்படுவதற்கான வழிகள் ஏதும் இல்லையென்ற நிலையில் இத்தொழிற்சாலையை மூடிவிட அரசு கொள்கை ரீதியான முடிவு எடுத்தது. அரசு தனது 5—11—1990 நாளிட்ட சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையின் ஆணை (நிலை) எண் 752ல் மேற்குறிப்பிட்ட சந்தனமர எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை மூடிவிட உத்தரவிட்டது.

2. தொழிலாளர்—நிர்வாகத்தினர் இடையேயான பிரச்சினையால் ஆலை மூடப்படவில்லை. தொழிற் தகராறு ஏதும் நிலுவையில் இல்லை. இத்தொழிற்சாலை மூடப்பட்டதன் விளைவாக, நிர்வாகம், அங்கு பணியாற்றி வந்த 65 தொழிலாளர்களில் 52 பணியாளர்களை 1947ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 25எப்-ன் படி பணிக்குறைப்பு செய்தது. அவர்களுக்கு உரிய நஷ்டஈடு அளிக்கப்பட்டது. அதனை தொழிலாளர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர். மீதமுள்ள 13 தொழிலாளர்கள் தொழிற்சாலை வளாகம் மற்றும் தேங்கி இருக்கும் பொருட்களின் இருப்பின் பாதுகாப்பிற்காகவும் பணியில் தொடர்ந்து அமர்த்தப்பட்டுள்ளனர்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் தான் உயர்ந்த ரக சந்தனம் கிடைக்கிறது என்பதும் அதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் இன்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சராக இருக்கின்ற அவருடைய தொகுதியில் இருக்கக்கூடிய தெக்குப்பட்டு என்ற கிராமத்திலே 1984ஆம் ஆண்டு இந்த ஆலை துவங்கப்பட்டு இன்று புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே எதையும் மூடியிருக்கின்ற ஒன்றை திறந்துதான் பழக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு இதில் சாதனைப் படைத்துக்கொண்டிருக்கிறார்களே ஒழிய எதையும் மூடியதாக வரலாறு இல்லை. ஆகவே, நீங்கள் 5—11—1990 ஆம் தேதி மூடுவதற்காக அரசாணை பிறப்பித்து இருக்கிற ஒன்றைமீண்டும் மாற்றி அங்கு இந்தத் தொழில் வளர்ச்சி அடையவும் தொழிலாளர்களுக்கு எல்லாம் வேலை கிடைக்கவும் ஆவன

1992 மார்ச் 23] [திரு. சி. ஞானசேகரன்]

செய்யும் முகத்தான் அந்த ஆலையை திறப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, செ, ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தொழிற்சாலைகளை மூடுகின்ற எண்ணம் மனித நேயம் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு கிடையாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற்சாலையை மூடுவதற்கு அரசு 5—11—1990 ஆம் தேதி அன்று எடுக்கப்பட்ட முடிவு அன்றைக்கு எந்த அரசு இருந்தது என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட முடிவு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்

தொழிலாளர்களின் பதட்ட நிலை என்று சொன்னார்கள். அங்கே அந்த ஆலை மூடப்பட எடுக்கப்பட்ட முடிவினால் எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே 65 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள் அவர்களிலே 52 பணியாளர்கள் 1947ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டம் பிரிவு 25 (எப்)—ன் கீழ் பணிக் குறைப்பு செய்யப்பட்டிருக்கிறார்கள். மீதம் இருக்கிற 13 தொழிலாளர்களுக்குத் தொழிசாலை வளாகம் மற்றும் தேங்கி இருக்கும் பொருட்களின் இருப்பினை பாதுகாப்பதற்கு அவர்கள் பணியில் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி, ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தைத் தான் நானும் சொன்னேன் எப்போதும் சில கறைப்படிந்த கைகளுக்குச் சொந்தக்காரர்கள் மூடியதை நல்லக் கரங்களைக் கொண்டு இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறக்கவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத் தான் 1990ஆம் ஆண்டு மூடப்பட்ட அந்த ஆலையை இப்போது இந்த நல்ல ஆட்சி மலர்ந்து இருக்கிற இந்த வேளையில் திறக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தேன். இன்று அதாவது சந்தன தொழிலிலே மிக முக்கியமான அதாவது மைசூர் சாண்டல் சோப் என்று கர்நாடக அரசு தயாரித்துக் கொண்டு இருக்கிறது. அதேபோல் இந்த அதிகமான கோடிக் கணக்கில் முதலீடு செய்து துவக்கப்பட்ட இந்த ஆலையில் அட்லீஸ்ட் இந்த சோப் தயாரிக்கின்ற தமிழ்நாடு சோப் என்ற ஒன்றை நாம் உருவாக்குவோமானால் நல்ல லாபம் கிடைக்கும் ஆகவே. அந்த லாபத்தைப் பெறும் வகையில்

இந்த இடத்திலே அரசு திறக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன் அப்படியில்லை என்று சொன்னால். தனியார் துறையின் மூலமாகவாவது அந்தத் தொழிற்சாலையை இயக்கு வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.
முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தத் தொழிற்சாலையை மூடவேண்டுமென்ற முடிவினை அரசு அந்தக் காலகட்டத்தில் ஏன் எடுத்தது ; அது லாபத்தில் இயங்கியதா அல்லது நஷ்டத்தில் இயங்கியதா என்பன போன்ற விவரங்கள் மாண்புமிகு அமைச்சரிடம் இருக்குமேயானால் அதை இந்த அவைக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 1—10—1984ஆம் தேதி முதல் தமிழ்நாடு வனத் தோட்ட கழகத்திற்கு இந்த ஆலையை நிறுவ அன்றைக்கு அரசு அனுமதி அளித்து இருந்தது. தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட சந்தன எண்ணெய் மற்றும் அதன் துணைப் பொருட்கள் உரிய விலைக்கு விற்பனையாகாததால் தயாரிக்கப் பட்ட பொருட்களின் இருப்பு அதிகரித்து, ரூபாய் 45 லட்சம் பெருமானமுள்ள பொருட்கள் விலை போகாமல் தேக்க நிலை அடைந்ததால், தொழிற்சாலையினுடைய செயல்பாட்டுத் திறன் ஆராயப்பட்டது, இறுதியாக. இத்தொழிற்சாலை இலாபகர மாகவும் நிரந்தரமாகவும் செயல்படுவதற்கான வழிகள் எதுவும் இல்லையென்ற நிலையில் இத்தொழிற்சாலையை மூடிவிட அரசு கொள்கை ரீதியான முடிவு எடுத்தது, அதனை 5—11—1990ஆம் நாளிட்ட சுற்றுப் புறம் மற்றும் வனத் துறையினுடைய ஆணை எண் 752–இல் சந்தன மர எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை, லாபகரம் இல்லை என்கின்ற காரணத்தினாலே மூடிவிட உத்தரவிட்டது என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்,

5. அறிக்கை அளித்தல்,

சட்ட விதிகள் ஆய்வுக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழு.